

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.08.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவினை திறந்து வைத்து, அதற்கான இலச்சினையை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர். மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா. ரெட்டி, வன உயிரின குற்றக்கட்டுப்பாட்டு பிரிவு இயக்குநர் திருமதி. காஞ்சனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கிராமப்புற பள்ளிகளுக்கும் காலை சிற்றுண்டி விரிவாக்கம்!

## 25ம் தேதி திருக்குவளையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஆக.10 -

தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப் பேற்ற பின் அரசு பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை அறிவித்து தொடங்கி வைத்தார்.

இதில் முதற்கட்டமாக மாநகராட்சி, நகராட்சி பகுதியில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் வழங் கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஒன் றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவி களுக்கும் சிற்றுண்டி திட்டம் விரிவாக் கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

இதையடுத்து வரும் 25ம் தேதி திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது.

இதற்கான விழா, முன்னாள் முதல்வர் கலைஞர் படித்த நாகப்பட்டி னம் மாவட்டம் திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி யில் நடைபெறுகிறது.

வரும் 25ம்தேதி காலை 8.30 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை சிற்றுண்டி உணவை மாணவ, மாணவிகளுக்கு வழங்கி தொடங்கி வைக்கிறார்.

இதைத்தொடர்ந்து கலைஞர் உரி மைத்தொகை பெற மனு செய்த மகளிருடன் முதல்வர் கலந்துரை யாடுகிறார்.

## ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள்

# தமிழ்நாட்டில் எப்போது அமைக்கப்படும்?

## ஒன்றிய அரசிடம் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 10 -*

*தமிழ்நாட்டில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் எப்போது அமைக்கப்படும் என்று ஒன் றிய அரசிடம் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.*

*ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சகத்திடம் மக்கள வையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார். அதன் விவரங் கள் பின்வருமாறு:*



*அமராவதியில் அமைந் துள்ள பிரதமரின் ஒருங்கி ணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைகள் பூங்கா (பி.எம். மித்ரா), மகாராஷ் டிராவின் ஜவுளி வர்த்தகத் திற்கு மேலும் வலுசேர்க் குமா என்றும், அவ்வாறு வலுசேர்க்கிறது என்றால் அமராவதியை ஜவுளி பூங் காவிற்கான இடமாக தேர்வு செய்ததில் மகாராஷ் டிராவின் "ஜவுளி மதிப்பு சங்கிலி" எவ்வித குறிப்பிடத் தக்க பங்களிப்பை அளித் தது? பிரதமரின் மித்ரா ஜவு ளிப் பூங்காவை நிறுவியதில் மகாராஷ்டிரா தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பங்க ளிப்பு விவரங்களைத் தெரி யப்படுத்தவும்?*

*பிரதமரின் மித்ரா ஜவு ளிப் பூங்கா மூலம் இந்தியா உலகளாவிய ஜவுளி உற் பத்தி மையமாக மாறுமா என்றும் ஜவுளிப் பூங்கா விற்கு எதிர்ப்பார்க்கப்படும் முதலீட்டின் விவரங்கள் குறித்து தெரியப்படுத்தவும். பிரதமரின் மித்ரா ஜவுளிப் பூங்கா மூலம் நேரடியாக வும் மறைமுகமாவும் உரு வாக்கப்படும் வேலை வாய்ப்பு எவ்வளவு? அடிப் படையாக இருக்க வேண் டிய சாலை, தண்ணீர் மற் றும் மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதி களை, இந்த ஜவுளிப் பூங்கா கொண்டுள்ளதா? தமிழ் நாட்டில் புதிய ஒருங்கி ணைந்த ஜவுளிப் பூங்காக் கள் அமைக்க ஒன்றிய அரசி டம் ஏதேனும் திட்டம் அல் லது முன்மொழிவு உள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரி யப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.*

## வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் - மீத்தேன் திட்டம் உள்ளிட்ட

# இரண்டு மசோதாக்கள் மக்களவையில் தாக்கல்!

## டாக்டர் பொன். கவுதமசிகாமணி கொண்டு வந்தார்!

*புதுடெல்லி, ஆக. 10-*

*மக்களவையில் கள்ளக் குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். பொன்.கவுதமசிகாமணி இரண்டு மசோதாக்களை தாக்கல் செய்தார்.*

*1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவ தற்கான மசோதாவை முத லில் தாக்கல் செய்தார்.*

*1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம், பட் டியலிடப்பட்ட பழங்குடி யினர் சமூகத்தைப் பொறுத்தமட்டில் வழங் கப்பட்டுள்ள பாலினப் பாகுபாடு, பட்டியலினப் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்களுக்கு மட் டும் அவர்களின் தந்தை*



*யின்/இந்து பிரிக்கப்படாத குடும்ப சொத்துக்கள் சட் டப்பூர்வமாக சமமான பங் கைப் பெற முடியாத அநீதி யான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது .*

*பாலின அடிப்படையி லான எந்தவொரு பாகுபா டும் நிலைத்திருக்க முடி யாது, ஏனெனில் இது அரசியலமைப்பின் 14-வது பிரிவின் கொள்கைக்கு எதி ரானது என்றும், உச்சநீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தால் மீண் டும் தெளிவுபடுத்தப்பட் டுள்ளது.*

*1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 2(2) பிரிவைத் திருத்தக் கோரும் கோரிக்கையா னது, அவர்களின் தந்தை யின்/இந்து பிரிக்கப்படாத குடும்பச் சொத்துக்களில், பட்டியல் பழங்குடியினப் பெண்களுக்குச் சம உரிமை வழங்கும் நோக்குடன் உள் ளது. எனவே தாங்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.*

*இரண்டாவதாக "நிலக் கரி தாங்கும் பகுதிகள் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுச் சட்டம் 1957-ஐத் திருத்துவதற்கான மசோதாவை தாக்கல் செய் தார்.*

*தமிழ்நாடு பாதுகாக்கப் பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டம், 2020ன் கீழ் பாதுகாக்கப் பட்ட மண்டலத்தில் வட சேரி மற்றும் சேத்தியாத் தோப்பின் கிழக்குப் பகுதியான லிக்னைட் பிளாக்ஸ் விழுகிறது, மேலும் மைக்கேல்பட்டி காவிரி டெல்டாவின் மிக வும் வளமான பகுதியை ஒட்டிய பெரிய நெல் விளையும் பகுதியில் விழுகி றது.*

*மேற்குறிப்பிட்ட பகுதி களில் உள்ள மூன்று நிலக் கரி சுரங்கங்களை ஏலம் விடுவதற்கான ஒன்றிய அர சின் ஒருதலைப்பட்ச நடவ டிக்கை, தமிழகத்தின் முக் கிய உணவு உற்பத்திப் பகுதியான டெல்டாவில் கணிசமான கொந்த ளிப்பை ஏற்படுத்தும் சாத் தியம் உள்ளது.*

*தமிழ்நாடு பாதுகாக்கப் பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டம், 2020, நிலக்கரி படுகை மீத் தேன் சுரண்டலைத் தடுக்கி றது. எனவே இந்த நடவ டிக்கையை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று இந்த இரண்டு திருத்த மசோதாக்களை நாடாளு மன்ற கூட்டத் தொடரில் கள்ளக்குறிச்சி நாடாளு மன்ற உறுப்பினர் டாக் டர். பொன். கவுதமசிகா மணி தாக்கல் செய்தார்.*



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் திருக்க டையூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பி னருமான நிவேதா எம்.முருகன் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் அமுர்த.விஜய குமார் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், குழுமூர் ஊராட்சி செம்புரான் ஏரி ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா உள்ளார்.

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில்

# தமிழ்நாடு வனம் - வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்! இலச்சினை வெளியிட்டார்!

சென்னை, ஆக.10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.08.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச் சூழல், காலநிலை மாற் றம் மற்றும் வனத்துறையின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகை யில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வனம் மற் றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவினைத் திறந்து வைத்து, அதற்கான இலச் சினையை வெளியிட்டார்.

வனத்துறையின் 2021-22ஆம் ஆண்டிற் கான மானியக் கோரிக்கையில், மாநில அள வில் திட்டமிடப்பட்ட வன உயிரினக் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்க வனம் மற் றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட் டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட் டுப்பாட்டு பிரிவு நிறுவப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

திட்டமிட்ட வனம் மற்றும் வன உயிரின குற் றங்களைத் தடுக்கும் வகையில் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இப்பிரிவு, வன உயிரினக் குற்றங்கள் குறித்த தகவல் மற்றும் நுண்ண றிவு விபரங்களை சேகரம் செய்தல், சட்டவிரோ தமாக வன உயிரினங்கள் மற்றும் வன உயி ரின பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுத்தல், உலகளாவிய அமைப்புகளுடன் ஒன் றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றை முக் கிய குறிக்கோள்களாகக் கொண்டு செயல்படுகி றது.

மேலும், வன உயிரினக் குற்றங்கள் தொடர் பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்படுத்துதல், வனங்களை ஒட்டி வாழும் பகு திகளில் உள்ள மக்களிடையே தகவல் கட்ட மைப்பை மேம்படுத்துதல், வன உயிரினக் குற்றங்கள் சார்ந்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ள இடங்களை வரைபடமாகத் தயா ரித்தல் ஆகியவை இப்பிரிவின் முக்கியச் செயல் பாடுகள் ஆகும்.

இப்பிரிவின் தலைமையகம் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டு, இயக்குநரை தலைவராகவும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் துணை இயக்குநர்களின் தலைமையிலும் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பிரிவில் 118 முன்கள வனப்பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

இப்பிரிவின் வாயிலாக 190-க்கும் அதிக மான வன உயிரினக் குற்றங்கள் பதிவு செய் யப்பட்டுள்ளது. இதில் யானை தந்தங்கள் மற் றும் யானைத் தந்தத்திலான பொருட்களை விற்பனை செய்தல், புலித்தோல் மற்றும் அதன் பாகங்களை சட்டவிரோதமாக விற்பனை செய் தல் மற்றும் சட்டவிரோதமாக பாம்புகள், கிளி கள், கடல் சங்குகள், கடல் அட்டைகள் ஆகி யவை வைத்திருந்த குற்றங்கள் என 50-க்கும் மேற்பட்ட வனக்குற்றங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து வன உயிரினப் பொருட்கள் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல் காலநிலை மாற் றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வன பாதுகாவலர் மற்றும் மற்றும் முதன்மை வனஉயிரினக் காப்பாளர் ஸ்ரீனி வாச ஆர் ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (பாதுகாப்பு, விழிப்புணர்வு மற் றும் தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரின குற்றக்கட்டுப்பாடு பிரிவு) ஆகாஷ் தீப் பருவா, (புலிகள் திட்டம்), வன உயிரின குற்றக்கட்டுப் பாட்டு பிரிவு இயக்குநர் திருமதி.இரா.காஞ்சனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விருதுநகரில் சிப்காட் மூலம் 1,052 ஏக்கரில்

# ரூ.2 ஆயிரம் கோடியில் மெகா ஜவுளிப் பூங்கா!

## பணிகள் தீவிரம்! 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!

*சென்னை, ஆக. 10 -*

*விருதுநகர் மாவட்டத் தில் சிப்காட் மூலம் 1,052 ஏக்கரில் ரூ.2 ஆயிரம் கோடி யில் தமிழகத்தின் 'மெகா' ஜவுளி பூங்கா அமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.*

*இந்தியா முழுவதும் தமி ழகம், தெலங்கானா, கர்நா டகா, மராட்டியம், குஜ ராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் ஜவுளி பூங் காக்கள் அமைக்க ஒன்றிய அரசு அறிவிப்பு வெளியிட் டது. அதன்படி, தமிழகத் தில் விருதுநகர் மாவட்டத் தில் பி.எம். மித்ரா ஜவுளி பூங்கா இ.குமாரலிங்க புரத் தில் சிப்காட் நிலத்தில் அமைக்க தேர்வு செய்யப் பட்டுள்ளது. இந்த ஜவுளி பூங்காவுக்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மார்ச் 22ல் முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வர்த்தகம், ஜவுளித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் கையழுத்திடப் பட்டன. காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது இதற்கான பணி கள் நடந்து வருகிறது.*

*இதுகுறித்து தமிழக அர சின் சிப்காட் உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: விருது நகர் மாவட்டத்தில், 1,052 ஏக்கர் சிப்காட் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது. ஒன்றிய, மாநில அரசுகள் ரூ.2 ஆயி ரம் கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்துகிறது. இதில் 51 சதவீதம் ஒன்றிய அரசும், 49 சதவீதம் மாநில அரசும் நிதி ஒதுக்குகிறது. இ.குமார லிங்க புரத்தை மையமாக கொண்டு அருகில் உள்ள அச்சம்பட்டி, கோவில்புலிக் குத்தி கிராமங்கள் வரை இந்த ஜவுளி பூங்கா அமைகி றது. இதன்மூலம் 2 லட்சம் பேர் வேலை வாய்ப்பு பெறுவர். அதிவீன உட்கட்டமைப்பு, சிறப்பு உற்பத்தி பகுதிகள், சமூக உட்கட்டமைப்பு, உற்பத் தியை உடன் தொடங்க சிறப்பு வசதிகள், வணிகப்ப குதி, பொது அடிப்படை வச திகள் ஆகியவை ஏற்படுத்தப் பட உள்ளன.*

*ஒரு துணியின் உருவாக்க தேவையான அனைத்து வச திகளுடன் ஆலைகள் அமைக்கப்பட உள்ளன. தையல், டிசைனிங், டை உள்ளிட்ட ஜவுளி தொடர் பான அனைத்து தொழில் கள் பூங்காவில் இடம்பெற உள்ளன. இங்கு ஊழியர்க ளுக்கான குடியிருப்பு வசதிக ளும் செய்யப்படும். ஒரு ஏக் கரில் சிப்காட் அலுவலகம் அமைய உள்ளது. நான்கு வழிச்சாலையில் இருந்து குமாரலிங்க புரத்திற்கு செல் லும் ரோடு 30 மீட்டருக்கு மாநில நெடுஞ்சாலைத்து றையால் அகலப்படுத்தப் பட உள்ளது. 1.8 கி.மீ. வரை விரிவாக்கம் செய்யப்படும். மண் பரிசோதனை முடிந்த விட்ட நிலையில் விரைவில் கட்டுமான பணிகள் துவங்க உள்ளன. பல கட்டங்களாக பணிகள் நடக்க உள்ளன. ரூ.36 கோடிக்கு குடிநீர் பிளான்ட் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட உள்ளது.*

*இந்த ஜவுளி பூங்கா முழு வீச்சில் செயல்பாட்டுக்கு வந்தவுடன் குமாரலிங்க பு ரம், கோவில்புலிக்குத்தி கிராமங்களில் உள்ள துவக் கப்பள்ளிகளை தத்தெடுத்து அப்பள்ளிக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட உள்ளன. பல கட்டங்களாக வளர்ச்சி பணிகள் செய்யப் பட உள்ளன. முதல் கட்டத் தில் அமைய உள்ள ஆலை கள் மூலம் 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் பேர் வரை பணி புரிய வாய்ப்பு கிடைக்கும். அடுத்தடுத்த கட்டங்களில் இதன் எண்ணிக்கை இன் னும் அதிகமாகி 2 லட்சம் வேலைவாய்ப்புகள் வரை உருவாகும். இது விருதுநகர் மாவட்ட மத்திய பகுதி மக்க ளுக்கு கிடைத்த பெரிய வரப்பிரசாதம் ஆகும். ஜவுளி பூங்காவிற்கான மாஸ்டர் பிளானை ஸ்கூல் நெட் நிறு வனம் செய்து வருகிறது. ஜவுளி தொழில்கள் அனைத் திற்கும் இடமளிக்கும் வகை யில் அலகு வாரியாக கட்டி டங்கள் அமைக்கப்பட உள்ளன.*

*குறிப்பாக சாய கழிவு களை சுத்திகரிக்க சி.யு.டி., சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. விரைவில் நில விலை உறுதி ஆகி அறிவிக்கப்படும். திட்ட அலுவலகம் ஒரு ஏக்க ரில் குமாரலிங்கபுரத்தில் அமைய உள்ளது. மண் பரி சோதனை முடிந்து விரை வில் பணிகள் துவங்கும். 160 முதல் 180 டெக்ஸ்டைல், அப்பேரல் அலகுகள் ஜவுளி பூங்கா மூலம் இடம்பெற உள்ளன. தமிழகத்தின் மிகப் பெரிய ஜவுளி பூங்காவாக இது இருக்கும். ஒவ்வொரு கட்டமாக இதன் வளர்ச்சி இருக்கும். தற்போது 11 ஜவுளி நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளன. உள்ளூர் மக்களின் வேலைவாய்ப் புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பணி கள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, எம்.இ., பி.எஸ். சி. படித்த பட்டதாரி இளை ஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகளவில் கிடைக்கும் என் றார்.*



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம். ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம். எல்.ஏ. தலைமையில் தஞ்சை புகைவண்டி நிலையத்திலிருந்து அமைதி ஊர்வலமாகப் புறப்பட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகம், தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் அமைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கும் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், எம்.இராமசந்திரன், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எல்.ஜி.அண்ணா, மணிமாறன், புண்ணியமூர்த்தி, கனகவள்ளி, மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநகர துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.